திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தெந்திருப்பேறை என்ற கிராமத்தில் இரவில் போகும் பஸ்கள் கடயனோடைப் பகுதி மக்கள் போக முடியாத நிலையில் இருப்பதால், இனிமேலாவது இதை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடிக்குத் தெரிவித்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடயனோடைக்கு பஸ்ஸை நீட்டுவதுபற்றி ஆர். டி. ஓ. வைக் கேட்டதில், ஒரு பஸ்ஸுக்கே பயணிகள் வருவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு பரிசீலிக்கப்படுவதற்கில்லை.

* 634 வினா—**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், ஆழ்வார் திருநகரியிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் தனியார் பேருந்தை தெந்திருப்பேறை, ஆறுமுக நேரி மார்க்கமாக கடையனோடைப் பகுதி வரைக்கும் நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தாலுகாவில் ஆறுமுகனேரி டவுனில் ஏராளமான ஜனத்தொகை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இந்தக் கடயனோடை இருக்கிறது. ஆகவே, அரசு ஆறுமுகநேரிக்கும், கடயனோடைக்கும் பஸ் போக்குவரத்தை விஸ்தரிக்க ஆர். டி. ஓ. வைக் கேட்டதற்கு அவருடைய பதில் என்ன

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே சொல்லியதுபோல

Even the one bus which is now serving adayanodai is found to be lacking in traffic potentialities.

எனவே, போதுமான பயணிகள் இல்லாததால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

அரசுப் பேருந்து பயணச் சீட்டுகள்

*635 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. கே. போஜன் — மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு அரசு பஸ் போக்குவரத்துக்குத் தேவைப்படும் டிக்கெட்டுகளை நமது மாநில அரசின் அச்சகத்தில் அச்சிடாமல் வெளி மாநில அரசின் அச்சகத்தில் அச்சடிப்பது உண்மையா?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுகளில் ஒரு பகுதி, டில்லிப் போக்குவரத்து நிறுவனத்தால் அச்சிடப்பட்டுப் பெறப்படுகின்றது.

(இ) அரசு அச்சகத்தில் வேலைச்சுமை அதிகரித்துள்ளதன் காரணமாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுக்களை அரசு அச்சகம் உரிய காலத்தில் அச்சிட இயலவில்லை.

1970 ஏப்ரல் 1]

திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து களில் பயணச் சீட்டுகள் ஆங்கிலத்தில் அச்சடித்து இருக்கிறது. சாதாரண மக்களுக்கு ஆங்கிலத்தில் படிக்கத் தெரியாது என்பதால், தமிழிலே அ சிட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழிலும் அச்சடிக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு அச்சகத்தில் பல மெஷின்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. ஏராளமானவர்களுக்கு வேலை கொடுத்து, அரசு பஸ் டிக்கட்டுகளை அச் சடிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அச்சகத்துறை அமைச்சருக்குத் தனிக் கேள்வி போட்டு விவரம் பெற வேண்டும்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற அளவில் சீட்டுகள் அதிகமாக பெரிதாக இருக்கிறதனால், ஒவ்வொரு டிக்கட்டையும் இரண்டு இரண்டாகச் செய்வதனால் நலமாக இருக்கும். அதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டிக்கெட்டை இரண்டாக்கு வதுபற்றித் தனியாகக் கவனிக்கலாம்.

திரு. கே. விநாயகம்: சார், நமது அரசாங்கம் ராபின் ஸிஸ்டம் ஆரம்பித்த பிறகுதான் இந்த டிக்கெட்டுகளை அடிக்க போதிய அளவில் இயந்திரங்கள் இல்லாமல், ஏற்கனவே இங்கு அடித்த பஸ் டிக்கட்டுகளை டெல்லிக்கும் பம்பாய்க்கும் அனுப்பப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, நம்முடைய தாள்களைக்கூட நாமே அடிக்க முடியவில்லை எனபது நமக்கே பெருமையாக இல்லாததால், விஸ்தரிப்புச் செய்து எந்த வகையிலாவது இங்கேயே செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பரிசுச் சீட்டுகளை அடித் ததால், பஸ் டிக்கெட்டுகளை அடிக்க முடியவில்லை என்று சொல்வது சரியில்லை. ஏற்கனவே அச்சகத்தில் பயண டிக்கட் கள் அடிப்பதில், மாதம் ஒன்றுக்குத் தேவைப்படுவது 11,20,00,000. எனவே பஸ் டிக் கட்டுகளை அரசாங்க அச்சகத்திலேயே அடிக்க நெருக்கடியாக இருந்ததால் ஓரளவுக்கு வேறு வழிகளில் ஏற்பாடு செய்யப்படுகிறது. அச்சகத்தை இன்னும் பலப்படுத்த, போக்குவரத்துத் துறையிலேயே ஒரு அச்ச கத்தை அமைக்க செயற் குறிப்பு இருக்கிறது. அதை 1970-71-ம் ஆண்டில் பரிசீலிக்கலாம்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, அரசாங்கப் போக்குவரத்துத் துறை டிக்கெட்டுகளை அச்சடிப்பதில் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கப் படும் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வேறு மாநிலத்திற்கு எவ்வளவு தொகை என்பதில்லை. டெல்லி ட்ரான்ஸ்போர்ட் அண்டர் டேகிங்கில் அச்சடிப்பதில் ஒரு லட்சம் டிக்கெட்டுக்கு ரூ. 175. பாம்பே எலெக்ட்ரிக் சப்ளை அண்டர்டேகிங்கில் ரூ. 180 இதில் போக்குவரத்துச் செலவு, ட்ரான்ஸ்போர்ட்டேஷன் செலவு ரூ 10, 15 ஆகிறது, ஆக ரூ. 190 ஆகிறது. நம்முடைய அச்சகத்தில் செய்ய 190 ரூபாய் செலவு ஏற்படுகிறது.